## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - பணியிடை காலமான அரசு ஊழியர் திருமதி. ஆ.இந்துமதி என்பவரது மகள் - திருமதி. போ.சுகுணாதேவி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-4(2))துறை**

அரசாணை (ப) எண்.127

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம்
07 JUN 2023
சென்னை-5

நாள்: 05.06. 2023
சோபகிருது ஆண்டு
வைகாசி 22 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:-

1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். இ6/41199/2006, நாள். 10.06.2022.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

********

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட, ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் பட்டதாரி காப்பாளினியாக பணிபுரிந்தபோது 14.07.2004 அன்று காலமான திருமதி. ஆ.இந்துமதி என்பவரது மகள் திருமதி. போ.சுகுணாதேவி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 21.01.2022 முற்பகல் முதல் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துரு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை

(த.பி.பா)

உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திருமதி. போ.சுகுணாதேவி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 21.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திருமதி. போ.சுகுணாதேவி, இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி பெற தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா. எண். 17194/ட்டி1/2022, நாள். 27.10.2022 மற்றும் அ.சா. எண்.4299460/ஜி2/2023, நாள். 24.04.2023 -இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. லட்சுமி பிரியா,**
அரசு செயலாளர்.

<u>பெறுநர் :-</u>

இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை-600 005.
திருமதி. போ.சுகுணாதேவி, இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை – 600 005.
(ஆதி திராவிடர் நல இயக்குநர் வழியாக)
மாவட்டக் கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008

<u>நகல் :-</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

ந.க.எண். இ6/41199/2008. நாள். 06.2023

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தனிநபருக்கு சார்பு செய்யும் பொருட்டு

05/06/2023
பிரிவு அலுவலர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்
சேப்பாக்கம், சென்னை–600 005.

பெறுநர்
திருமதி போ. சுகுணாதேவி,
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள்,

சென்னை–5.

முன்னிலை: திரு.சு.பார்த்திபன், BSc.,

ந.க.எண். இ6/41199/2006 நாள்.12.06.2023.

பொருள்: பணியாளர் தொகுதி–ஆதிதிராவிடர் நலம் – ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் – இளநிலை உதவியாளர் – திருமதி. போ.சுகுணாதேவி என்பவரது பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை: 1. அரசாணை (ப) எண்.127 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–4(2) துறை நாள். 05.06.2023.

******

ஆணை:–

பார்வை 1–இல் காணும் அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.போ.சுகுணாதேவி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது பணியினை தனியர் பணியேற்ற நாளான 21.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் திருமதி.போ.சுகுணாதேவி, இளநிலை உதவியாளர் என்பவர் முதல் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

12/6/23

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

<u>பெறுநர்.</u>

திருமதி.போ.சுகுணாதேவி,
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சென்னை–05.

12/06/23

<u>நகல்.</u>

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.
2. "இ5" இருக்கை.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.